செ.வெ.எண்: 316/2016 நாள்: 31.05.2016

# பத்திரிக்கைசெய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை இயந்திரம் (Point of Sale) மூலம் வழங்கபடவுள்ளது. நியாயவிலைக் கடை மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுக்கொண்டதற்குரிய விபரங்கள் நடைமுறையில் உள்ள பில்லுக்கு பதிலாக பொருட்களின் விபரம், அளவு, விலை, மொத்ததொகை, வாங்காத பொருட்களின் விபரங்கள் குறித்து அனைத்து விபரங்களும் அனைத்து குடும்ப அட்டைத்தாரர்களும் 01.07.2016 முதல் SMS (குறுஞ்செய்தி) மூலம் அவர்களது கைபேசி வாயிலாக அறிந்து கொள்ளலாம். எனவே குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக்கடையில் பொருட்கள் வாங்க செல்லும்போது தங்களது கைப்பேசி எண்ணினை தவறாது நியாயவிலைக்கடை விற்பனையாளரிடம் அளித்திடவும்,அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் தங்கள் குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களின் அசல் ஆதார் அட்டையை நியாயவிலைக் கடைகளுக்கு கொண்டு சென்று விற்பனையாளரிடம் காண்பித்து அதனை உடன் Scan செய்தபின் திரும்ப பெற்றுக்கொள்ளலாம். ஆகவே அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் குடும்ப உறுப்பினர்களின்ஆதார் கார்டுஎண் மற்றும் கைபேசி எண்கள் விபரத்தினை தவறாது நியாயவிலைக்கடை விற்பனையாளரிடம் அளித்து Point of Sale Machine-ல் பதிவு செய்ய உரிய ஒத்துழைப்பினை அளிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டஆட்சித்தலைவர்
கன்னியாகுமரிமாவட்டம்
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.